சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP: 68/2020

2024ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ம் நாள் எதிர்மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் அஜிஸ் (RW3) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

18.10.2024

நான் தற்போது பந்தல்குடி காவல்நிலையத்தில் சார்பாய்வாளராக பணிசெய்கிறேன். நீதிமன்றத்தில் வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் சொல்லியுள்ளவாறு 24.08.2020 அன்று நடைபெற்ற விபத்து சம்மந்தப்பட்ட பந்தல்குடி காவல்நிலைய குற்ற எண்.164/2020 வழக்கின் முதல்தகவல்அறிக்கை, இறுதிஅறிக்கை, பார்வை மகஜர், வரைபடம், மோட்டார்வாகன ஆய்வாளர் அறிக்கை ஆகிவற்றை தாக்கல் செய்கிறேன். அவை முறையே சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை :** ( 1வது எதிர்மனுதாரர் தரப்பில்)

குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை :** ( மனுதாரர்கள் தரப்பில்)

நான் இந்த குற்ற வழக்கில் புலன்விசாரணை அதிகாரி கிடையாது என்றால் சரிதான். எதற்காக மேற்படி குற்ற வழக்கை நிறுத்தி வைத்துள்ளார்கள் என்பது நேரடியாக தெரியாது என்றால் கோப்பின் அடிப்படையில் தெரியும். இந்த வழக்கு பொருண்மை

**அடிப்படையில் முடிக்கப்படவில்லை என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.